தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 25
இதழ் 09
ஜனவரி 2024




## நகர்ப்புர மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குதல்



பெண்களின் வாழ்வாதாரம் சிறக்க வேண்டும், அவர்களின் வறுமை நீங்க வேண்டும், பல்வேறு துறைகளில் அவர்கள் வளர்ச்சி கண்டு வளம் பெற வேண்டும்

முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

**அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,**

**உங்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்!!**

“பெண்களின் வாழ்வாதாரம் சிறக்க வேண்டும், அவர்களின் வறுமை நீங்க வேண்டும், பல்வேறு துறைகளில் அவர்கள் வளர்ச்சி கண்டு வளம் பெற வேண்டும்”, என்ற உன்னத நோக்கத்துடன் தமிழ்நாட்டின் தருமபுரி மாவட்டத்தில் 1989ஆம் ஆண்டு துவக்கப்பட்ட சுய உதவிக் குழு அமைப்பானது இன்று மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது. நம் மாநிலத்தின் கடைக்கோடியில் வசிக்கும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கூட சுய உதவிக் குழுவில் இணைந்து தொழில் முனைவோராகி, பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ளதை அனைவரும் அறிவீர்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிர் பொருளாதார சுய சார்பு பெற்றிட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு, ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். சுய உதவிக் குழுக்களுக்கு தேவையின் அடிப்படையில் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுத்து வருவது சுய உதவிக் குழுவினரிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காக முனைப்புடன் செயலாற்றி வருவதால், சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார வளம் தொடர்ந்து மேம்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக மதி அனுபவ அங்காடியை திறந்து வைத்து, சுய உதவிக் குழுக்களின் பொருட்களை இணையம் மூலம் விற்பனை செய்வதற்காக தனிப்பட்ட இணைய தளத்தை உருவாக்கி, பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான நடைமுறைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிபடுத்தியுள்ளார்கள்.

உங்களது சுய உதவிக் குழுக்கள் மூலம் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்கி சந்தைப்படுத்தி, இந்த மாபெரும் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு, அரசின் நலத் திட்டங்களினால் பயனடைந்து வளமாக வாழ தமிழர் திருநாளில் வாழ்த்துகிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)

திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்



## அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

**அனைவருக்கும் இனிய தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்!!**

சுய உதவிக் குழு இயக்கத்திற்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தர தொடர்ந்து செயல்பட்டு வரும் உங்கள் அனைவரையும், முற்றம் இதழின் வாயிலாக சந்தித்து, எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு எப்பொழும் மகிழ்ச்சியைத் தருகிறது.

மகளிர் மேம்பாட்டிற்காக சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் துவக்கப்பட்ட நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கோடிக்கணக்கான மகளிருக்கு வளமான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தந்துள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் வாயிலாக சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடப்பு நிதியாண்டில் வங்கிக் கடன் இணைப்பாக 30 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து, 30.11.2023 வரை 20,940.17 கோடி ரூபாய் வங்கிக் கடனாக 3,47,709 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்குவதில் நாம் சாதனை படைப்போம் என்பது உறுதி.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், சுய உதவிக் குழுவினரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக வங்கிக் கடன் இணைப்புகளை வழங்குதல், இளைஞர் திறன் பயிற்சி பெற்றவர்களுக்கு பணி அமர்வு ஆணைகளை வழங்குதல், சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திடுவதற்கான சந்தைகளைத் துவக்கி வைத்தல் உள்ளிட்ட நல்ல பல திட்டங்களை செயல்படுத்திட நம்மை ஊக்குவித்து வருகிறார்.

நீங்கள் பெற்றுள்ள வெற்றி மிகப் பெரியதாக இருப்பினும், உங்களின் வெற்றிப் பயணம் மேலும் தொடர வேண்டும். தொடர்ந்து வரும் துன்பங்களை எதிர்த்து நிற்கும் மனம் தளராதவர்கள், அத்துன்பத்திற்கே துன்பம் தருவார்கள் எனக் கூறும்

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும்** -(குறள்: 625)

என்ற குறள் வரிகளுக்கேற்ப, தங்களுக்கு வரும் இடையூறுகளையும், தடைகளையும் தகர்த்து, முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோட்டு வரும் சுய உதவிக் குழு மகளிருக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும் என்று பெருமகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)



திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் முற்றம் இதழின் வாயிலாக புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்கிறேன்.

பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களின் பயன்கள் மாநிலத்தின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் பெண்களையும் சென்றடையச் செய்திடும் அரும் பணியினை நமது மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

“பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்” என்ற மகாகவி பாரதியாரின் கவிதை வரிகளுக்கு ஏற்ப, வெளியுலகம் அறியாமல் வீட்டிலேயே அடைபட்டு, கல்வி அறிவு மறுக்கப்பட்டு, தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட பிறரின் உதவியை எதிர் நோக்கியிருந்த பெண்களை தொழில் முனைவோராகவும், அவர்களை பொருளாதார சுய சார்பு பெற்றவர்களாகவும் உருவாக்கிய பெருமை நமது சுய உதவிக் குழு இயக்கத்தையே சாரும்.

கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் உள்ள ஏழை எளிய மக்கள், மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோர் மற்றும் முதியோர்களைக் கண்டறிந்து அவர்களை குழுவாக இணைத்தல்; அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்குதல்; வேலைவாய்ப்புகள் பெற்றுத் தருதல்; கடன் இணைப்புகள் வழங்கி தொழில் முனைவோராக்குதல்; இளைஞர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்கி அவர்களுக்கு வேலை வாய்ப்புகளும், சுய தொழில் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தருதல்; சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்துதல் என தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கமும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

ஒற்றுமைக்கும், அயராத உழைப்பிற்கும், தடைகளைத் தகர்த்து முன்னேறும் செயல் வேகத்திற்கும், தோல்விகளை வெற்றிகளாக்கும் மனவலிமைக்கும் உரியவர்கள் என்ற பெருமை பெற்றவர்கள் நீங்கள். மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் உங்களுக்கு தமிழ்நாடுமகளிர்மேம்பாட்டுநிறுவனம்என்றும்உந்துசக்தியாகஇருக்கும்என்பதைதெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,
ஸ்ரேயா
(செயல் இயக்குநர்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்றமகற்கு**

– (குறள்: 110)

எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை.

# உள்ளே...


| | |
|---|---|
| மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளித்தார் | 07 |
| தென் மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆய்வு | 09 |
| மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குதல் | 11 |
| கிருஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சி | 16 |
| வேலூர் மாவட்டத்தில் வானவில் மையம் திறப்பு | 17 |
| உழைக்கு மகளிருக்கான சட்டங்கள் | 28 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்
விலை ரூ. 20/– • மலர் 25 • இதழ் 09 • ஜனவரி 2024

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பா.ஜெயசுதா,** பொது மேலாளர் (பொ),

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# புதிய சிந்தனை எனும் செயல்...



**அன்புள்ள வாசகர்களுக்கு,**

பிறந்திருக்கும் 2024– ஆண்டின் இனிய புத்தாண்டு வாழ்த்துகளை உங்கள் அனைவரோடும் பகிர்ந்து கொள்வதில் முற்றம் மகிழ்ச்சி அடைகின்றது. சென்ற ஆண்டில் நாம் செயல்படுத்திய பல செயல் பாடுகளிலிருந்து, நாம் சந்தித்த பல நிகழ்வுகள் மற்றும் பிரச்சனைகளிலிருந்து புதியதாக எப்படிப்பட்ட படிப்பினைகளை நாம் கற்றுக் கொண்டோம் என சீர்தூக்கி பார்க்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். கடந்த ஆண்டுகளில் நாம் பெற்ற அனுபவங்கள்தான், வரும் காலங்களில் நமது வாழ்க்கையை செம்மைப்படுத்தும் என்பது உறுதி. காரணம், அனுபவப் பாடமானது பெரும்பாலும் நாம் செய்த தவறுகளிலிருந்து கிடைப்பதுதான் என்பதே பரவலான கருத்தாகும்.

பல சிறப்பான செயல்பாடுகளை செய்வதற்கென ஒரு பச்சை நிற செயலியை உருவாக்கி, அதை நல்லவரால் உருவாக்கப்பட்ட ஒரு இயந்திர மனிதனுக்குள் உட்செலுத்தி, பல்வேறு சிறப்பான பணிகளை செய்ய வைத்து சாதனைகளை நிகழ்த்திய அதே வேளையில், சுயநலமிக்க ஒருவர் பேரழிவுகளை ஏற்படுத்தும் சிகப்பு நிற செயலி ஒன்றை உருவாக்கி அந்த இயந்திர மனிதனுக்குள்ளிருந்த பச்சை நிற செயலியை தூக்கி எறிந்துவிட்டு, அழிவை உருவாக்கும் சிகப்பு நிற செயலியை உள் செலுத்தி பெரும் அழிவுகளை ஏற்படுத்துவதாக நாம் திரைப்படத்தில் பார்த்து இருக்கின்றோம்.

இதிலிருந்து, இப்புதிய ஆண்டில் நம்மிடையே புதைந்து கிடைக்கும் பிறரை அழிக்கும் சிந்தனைகள் எனும் சிகப்பு நிற செயலியை தூக்கி எறிந்துவிட்டு ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் மற்றும் நற்பண்புகள் எனும் பச்சை நிற செயலியை நாம் உள்வாங்கிக் கொண்டு இந்த ஆண்டை நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் தொடங்குவோம்.

தமிழர்களின் அடையாளமாக விளங்கும் அறுவடை திருநாள்..., விவசாயிகள் திருநாள்..., இயற்கைக்கு நன்றி கூறும் திருநாள்..., வான்புகழ் திருவள்ளுவர் திருநாள்..., விருந்தோம்பல் திருநாள்... என மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் பொங்கல் திருவிழாவின் நல்வாழ்த்துகளை முற்றம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

### மிக்ஜாம் புயல் கனமழை மற்றும் தென் மாவட்டங்களில் அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை தேசிய பேரிடராக அறிவித்து, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள விரைந்து நிதி ஒதுக்கீடு செய்திடக் கோரி,

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

## மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை 19.12.2023 அன்று புதுதில்லியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள், மற்றும் தென் மாவட்டங்களில் பெய்த அதி கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து எடுத்துரைத்து, அப்பாதிப்புகளை சீரமைத்திட தேவையான நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார்.



மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்து மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது குறித்தும், புயல் மழையால் பொதுக் கட்டமைப்புகளும், மின்சார உட்கட்டமைப்புகளும், குடிநீர் கட்டமைப்புகள், கிராம சாலைகள் போன்றவைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், தமிழ்நாடு அரசு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டதால் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் மிக விரைவாக இயல்பு நிலை திரும்பியது குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

மேலும், மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் 7.12.2023 அன்று சென்னைக்கு வருகை தந்து, ‘மிக்ஜாம்’ புயல் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தது குறித்தும், ஒன்றிய அரசின் பல்துறை ஆய்வுக் குழு, 12.12.2023 மற்றும் 13.12.2023 ஆகிய நாட்களில் மழைவெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்து, அக்குழு தன்னுடன் ஆலோசனை மேற்கொண்டது குறித்தும் எடுத்துரைத்ததுடன், தமிழ்நாடு அரசு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொண்டதற்கு அக்குழு பாராட்டு தெரிவித்ததையும் குறிப்பிட்டு, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத் தொகையாக 7033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் கோரப்பட்டதை தெரிவித்து, அந்நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய இரண்டு நாட்கள் பெய்த கனமழை முதல் அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விளக்கி, அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

எனவே, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 2000 கோடி ரூபாயை அவசர நிவாரண நிதியாக வாழ்வாதார உதவிக்காகவும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களின் தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்காகவும் வழங்கிட வேண்டும் என்றும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.








## மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டம் துவக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில் “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு விவரங்களைக் கேட்டறிந்ததுடன், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினைப் பார்வையிட்டார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் 7945 பயனாளிகளுக்கு 110 கோடியே 51 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர், முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் திரு. ப. மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் திரு. மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000/- நிவாரணத் தொகை வழங்கு பணி தொடக்க நிகழ்ச்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 17.12.2023 அன்று சென்னை, வேளச்சேரி, சக்தி விஜயலட்சுமி நகர், நியாய விலைக் கடை அருகில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000/- நிவாரணத் தொகை வழங்கும் பணியினை பயனாளிகளுக்கு வழங்கி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அசன் மௌலானா, திரு. அரவிந்த் ரமேஷ், திரு.பிரபாகர் ராஜா, திரு.ஜோசப் சாமுவேல், துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.ந.சுப்பையன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தென் மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆய்வு

## தூத்துக்குடி மாவட்டத்தில் அதி கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகள் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.12.2023 அன்று அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கு நேரில் சென்று, குறிஞ்சி நகர் போல் பேட்டை பகுதியில் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் திரு. என்பி. ஜெகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. லட்சுமிபதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.





## அதி கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.12.2023 அன்று அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கு நேரில் சென்று, செயின்ட் மேரீஸ் பள்ளியில் உள்ள நிவாரண மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்து, முகாம்களில் தங்கியுள்ள சுமார் 600 நபர்களுக்கு அரிசி, வேஷ்டி, சேலை, போர்வை, பாய், பிஸ்கட் மற்றும் ரொட்டி, பால் பவுடர், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். உடன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் திரு. என்பி. ஜெகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பி. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. லட்சுமிபதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.






# மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக நிவாரண நிதி வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 11.12.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் சங்கத்தின் தலைவர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., துணைத் தலைவர் திரு. எம்.ஏ. சித்திக், இ.ஆ.ப., இணைச் செயலாளர்கள் திரு.எஸ்.ஏ.ராமன்,இ.ஆ.ப.,திருமதி எஸ்.திவ்யதர்சினி, இ.ஆ.ப., ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த. மோகன், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

# சேலம் மாவட்டத்தில் “மக்களுடன் முதல்வர்” திட்டம் துவக்கம்







மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலத்தில் 18.12.2023 அன்று “மக்களுடன் முதல்வர்” திட்டத்தினை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றும் போது, “ சேலத்தில் 142 இடங்களில் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் நடைபெறும் என்றும், மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும்” என்றும் குறிப்பிட்டதுடன், மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கார்மேகம், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குதல்



மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள், 07.12.2023 அன்று மணலி மண்டலம், எஸ்.ஆர்.எஸ். லிமிடெட் நிறுவனத்தில் மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிகளுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சமையல் கூடத்தைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர்/மிக்ஜாம் புயல் மீட்புப் பணி சிறப்பு அலுவலர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், இ.ஆ.ப., மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் திரு. மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு. ஏ.வி. ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் 10.12.2023 அன்று, மணலி மண்டலம், சடையங்குப்பம் பகுதியில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வின் போது, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், இ.ஆ.ப., மண்டல கண்காணிப்பு அலுவலர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு. ஏ.வி. ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டாரம், வேடகட்டமடுவு ஊராட்சி, தி.அம்மாப்பேட்டை ஊரைச்சேர்ந்த 7 பேர், கடந்த அக்டோபர் மாதம் நடந்த பட்டாசு விபத்தில் உயிரிழந்தனர். இவர்கள் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்துக்காக பசு மாடு வளர்ப்புக்கு தருமபுரி மாவட்ட மகளிர் திட்டம் மூலமாக தீர்த்தமலை கனரா வங்கியின் மூலம் தலா 3 லட்சம் ரூபாய் கடன் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 19.12.2023 அன்று அரூர் வட்டம், கீரைப்பட்டியில் நடந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு கடன் உதவிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி.சாந்தி, இ.ஆ.ப., தருமபுரி மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## மிக்ஜாம் புயல் காரணமாக பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நிவாரண உதவிகளை வழங்கினார்.



சென்னை - ஆலந்தூர்



சென்னை -பெரம்பூர்



சென்னை - ஆயிரம் விளக்கு



சென்னை - சேப்பாக்கம்

கனமழையின் காரணமாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.



திருநெல்வேலி



தூத்துக்குடி




## மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேபாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களின் நகர்ப்புரப் பகுதிகளில் செயல்படும் நகர்ப்புர மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 23.12.2023 அன்று சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களின் நகர்ப்புரப் பகுதிகளில் செயல்படும் 1,877 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளைச் சேர்ந்த 23,742 பயனாளிகளுக்கு 125.50 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தனது உரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 2021-2022ஆம் நிதி ஆண்டில் 4,08,740 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 21,392.52 கோடி ரூபாயும், 2022-2023ஆம் நிதி ஆண்டில் 4,49,209 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 25,642.01 கோடி ரூபாயும், 2023-2024ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 30 ஆயிரம் கோடி இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, அதில் 15.12.2023 வரை 3,56,949 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 21,694.43 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வங்கிக் கடன் இணைப்பையும் வழங்கி இலக்கை அடைந்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை மேற்கு மாம்பலம் பகுதி அளவிலான கூட்டமைப்பானது மற்ற குழுக்களுக்கு கடனுதவியைப் பெருக்கித் தர இன்று இவ்விழாவின் வாயிலாக ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய் வங்கி கடனாக பெறுகிறார்கள்.

சென்னை, பல்லாவரம் பகுதியைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் மகளிர் சுய உதவிக்குழு 13 சகோதரிகளை உறுப்பினர்களாக கொண்டு செயல்பட்டு வருகிறது.தற்பொழுது சிறிய அளவில் செயல்பட்டு வரும் இத்தொழிலை மேம்படுத்தும் நோக்கில் ரூ. 15 இலட்சம் கடனுதவி இவ்விழாவில் வழங்கப்படுகிறது.

ஆவடி மாநகராட்சி திருமலைராஜபுரம் பகுதியைச் சார்ந்த சாலையோரம் வியாபாரம் செய்யும் 12 சகோதரிகளை ஒருங்கிணைந்து அக்சயா சிறப்பு மகளிர் சுய உதவிக் குழு ஆரம்பித்து சிறப்புற செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்பொழுது இக்குழுவிற்கு வாயிலாக ரூபாய் 20 லட்சம் வங்கிக் கடனாக வழங்கப்படுகிறது. கடனுதவி பெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள், மாநில அளவிலான வங்கியாளர் கூட்டமைப்பின் தலைவர் திரு. மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், வங்கியாளர்கள், சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்ற 1000 இளைஞர்களுக்கு

# பணி அமர்வு சான்றிதழ்களை வழங்கினார்





தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் 01.12.2023 அன்று 'நான் முதல்வன்' இளையா என்ற செயற்கை நுண்ணறிவு சார் (chatbot) மற்றும் அழைப்பு மையத்தை துவக்கி வைத்தல், தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாற்றம், "நீயே உனக்கு ராஜா" என்ற திட்டம் அறிமுகம் மற்றும் தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி முடித்து பல்வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்ற 1000 இளைஞர்களுக்கு பணி அமர்வு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி ஆகியவை நடைபெற்றது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் சார்பில், இளையா என்ற சார் (chatbot), IVRS ஒருங்கிணைந்த அழைப்பு மையத்துடன் கூடிய தளத்தை துவக்குதல், ஜான்சன் எலெக்ட்ரிக், போஸ் லிமிடெட், என்.எல்.சி., இந்தியா, நெட்டூர் டெக்னிகல் ட்ரெய்னிங் பவுன்டேஷன் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், "நீயே உனக்கு ராஜா" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, மூன்று பயனாளிகளுக்கு கைவினைப் பெட்டகங்கள் வழங்குதல், 300 இளைஞர்களுக்கு பணி அமர்வு ஆணைகள் போன்றவை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்று, பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்ற 1000 இளைஞர்களுக்கு பணி அமர்வு ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர். ப.செந்தில்குமார், இ.ஆ.ப., சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலாளர் மருத்துவர் தாரேஸ் அஹமத், இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குனர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







## ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்திட ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திருமதி. தனுஜா தாக்கூர் கால்கோ, ஐ.ஆர்.ஏ.எஸ்., அவர்கள் 28.12.2023 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்திற்கு வருகை தந்தார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களும், செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்களும் ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் அவர்களுக்கு விரிவாக விளக்கிக் கூறினர். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்த இணைச் செயலாளர் அவர்கள், நிறுவனத்தின் செயல்பாடுகள் சிறப்பாக இருப்பதாக பாராட்டினார்.

தொடர்ந்து, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் கிருஸ்துமஸ் - புத்தாண்டு பொங்கல் விற்பனைக் கண்காட்சி மற்றும் மதி அனுபவ அங்காடி ஆகியவற்றைப் பார்வையிட்ட ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் அவர்கள், சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகப் பாராட்டினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.









# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் கிருஸ்துமஸ் - புத்தாண்டு - பொங்கல் விற்பனைக் கண்காட்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், கிருஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் கிருஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சி சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 23.12.2023 அன்று துவங்கி 07.01.2024வரை நடைபெற்றது.

இக்கண்காட்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான முந்திரிப் பருப்பு வகைகள், மசாலாப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், நாட்டுச் சர்க்கரை, சத்து மாவு, சுடுமண் சிற்பங்கள், கால் மிதியடிகள், பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், கைவினைப் பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், மிளகு, இயற்கை மூலிகைகள், செயற்கை ஆபரணங்கள், சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி வகைகள், பரிசுப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், மரச் சிற்பங்கள், இயற்கை உரங்கள், தேன், கடலை மிட்டாய், மூலிகை பொடிகள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக் குழுக்களும், திருநங்கையர் சுய உதவிக் குழுக்களும் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்தனர். பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத துணிப் பைகள், மஞ்சப் பைகள் விற்பனை செய்யும் அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

2023 டிசம்பர் 23ஆம் தேதி முதல் 2024 ஜனவரி 07ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெற்ற இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இச்சிறப்புமிகு மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் கிருஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சிக்கு ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கிச் சென்றனர்.





# வேலூர் மாவட்டத்தில் வானவில் மையம் திறப்பு





தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக வேலூர் மாவட்டத்தில் உள்ள கே.வி.குப்பம் வட்டார இயக்க மேலாண்மை அலுவலகத்தில் வானவில் மையம் எனப்படும் பாலின வளமையத்தினை 27.12.2023 அன்று வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.உ.நாகராஜன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையுரையில், 'தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வேலூர் மாவட்டத்தில் முதல் முறையாக கே.வி.குப்பம் வட்டாரத்தில் பாலின வள மையம் அமைக்கப்பட்டு உள்ளது. இம்மையம் குடும்ப வன்முறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்கொடுமை உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பிரத்யேகமான அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. பெண்கள் பாதுகாப்பு கருதி அவர்களுக்கு உதவுதற்காக இந்த மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வள மையம் மூலம் காவல் நிலையம் முதல் நீதிமன்றம் வரை புகார் செய்வதற்கு பரிந்துரை செய்யப்படும் என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் கே.வி.குப்பம் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், மகளிர் திட்ட உதவித்திட்ட அலுவலர்கள், மாவட்ட வள பயிற்றுநர், உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் திட்ட பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# பகுதி அளவிலான கூட்டமைப்புகள் சார்பில் மிக்ஜாம் நிவாரணப் பொருட்கள்

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் பெரியபேட்டை, சென்னாம்பேட்டை, தெரசாசென்னாம்பேட்டை, அம்பூர்பேட்டை, கோணமேடு, பெருமாள்பேட்டை மற்றும் திருமாஞ்சோலை ஆகிய 7 பகுதி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்புகள் சார்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக 1,85,000 ரூபாய் மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் வாணியம்பாடி நகராட்சி மன்றத் தலைவி திருமதி. உமாபாய் சிவாஜிகணேசன், வாணியம்பாடி நகராட்சி ஆணையர் திரு.ப. சதீஷ்குமார், பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் பொறுப்பாளர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.








தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை




தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மு.க.ஸ்டாலின்**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

ஏழை எளிய மகளிரின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உருவான சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றியானது, பிற மாநிலங்களிலும் சுய உதவிக் குழுக்கள் உருவாக வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் நமது திராவிட மாடல் அரசானது, வறுமையற்ற, வளம்மிக்க, இளைஞர் திறன் மற்றும் பெண்ணுரிமை மிக்க தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**மகளிருக்கு பேருந்துகளில் இலவச பயணம், உயர் கல்வி கற்கும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ. 1000/- வழங்கும் புதுமைப் பெண் திட்டம், வீடு தேடி மருத்துவ சிகிச்சை தரும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் பசியைப் போக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை** போன்ற திட்டங்களால் தமிழ்நாட்டில் பெண்கள் சிறந்ததொரு பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

நமது அரசு அமைந்த நாள் முதல் இன்று வரை 12,11,898 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 68,728.96 கோடி வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கி சாதனை புரிந்துள்ளோம். மேலும் **மதி அனுபவ அங்காடி, பராமரிப்பின்றி இருந்த பூமாலை வணிக வளாகங்களை** புதுப்பித்து சுய உதவிக் குழு மகளிரின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திடும் வகையில் செயல்பாட்டிற்கு கொண்டு வந்தது, முத்தமிழறிஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3-ஆம் தேதியினை சுய உதவிக் குழுக்கள் தினமாக அறிவித்தது என பல்வேறு திட்டங்களை நமது திராவிட மாடல் அரசானது செயல்படுத்தி வருகின்றது.

சாதனைகள் படைத்து சமூகப் பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் சுய உதவிக் குழு உறுப்பினர்களான உங்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இணைவோம், உழைப்போம், வளர்வோம்,
உயர்வோம் என வாழ்த்துகிறேன்.!"

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

நாள்: 05.01.2024

# சாராஸ் கண்காட்சியில் சாதனை படைத்த தமிழ்நாட்டு சுய உதவிக் குழுக்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவாய் ஈட்டி பொருளாதார வளர்ச்சிப் பெற்று வருகின்றனர். தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் ஏழை எளிய பெண் கூட இன்று சுய உதவிக் குழுவில் இணைந்ததன் மூலம் தொழில் முனைவோராக மிளிர்ந்து வருகிறார்.

அவ்வாறு சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவர், டெல்லியில் நடைபெற்ற சாராஸ் கண்காட்சியில் கலந்து கொண்டு, சிறப்பாக செயல்பட்டு, நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். தனக்கு கிடைத்த பாராட்டு குறித்து அவர் கூறும்போது "என் பெயர் இந்திரா, நான் சிவகங்கை மாவட்டம், மறவமங்கலம் கிராமத்தில் செயல்படும் அய்யனார் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கிறேன். மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் கண்காட்சியில் பாரம்பரியமான கிராமிய உணவுப் பொருட்களை சுவையாக தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். சமீபத்தில் ஹரியானாவில் உள்ள கோரோகான் என்ற இடத்தில் சாராஸ் விற்பனைக் கண்காட்சி நடைபெற்றது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்களும் கலந்து கொண்ட இந்தக் கண்காட்சியில் தமிழ்நாட்டின் சார்பாக 17 மாவட்டத்தைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டன.

முதன் முறையாக இந்தக் கண்காட்சியில் நாங்கள் கலந்து கொள்வதால் பனை ஓலைப் பொருட்கள், மணி வகைகள், மண்பாண்டங்கள் போன்ற பொருட்களை எடுத்துச் சென்றோம். அந்தக் கண்காட்சி அரங்கத்தில் தமிழ்நாடு சார்பில் அமைக்கப்பட்டிருந்த உணவு அரங்கம் மூடப்பட்டிருந்தது. அங்கு இருந்த ஒருங்கிணைப்பாளரிடம் விவரம் கேட்டபோது,'தமிழ்நாடு உணவு அரங்கத்திற்கு எந்த குழுவும் வரவில்லை' என்று சொன்னார்கள். உடனே நான், 'எங்களுக்கு சமையல் நன்கு தெரியும். அதனால் தமிழ்நாட்டு உணவு வகைகளை நாங்கள் தயார் செய்கிறோம்' என்று சொன்னோம். நாங்கள் இரண்டு பேர் மட்டும் இருப்பதாக சொன்னவுடன், தயக்கத்துடன் 'சரி' என்று சொன்னார்கள்.

சுமார் 15 நாட்கள் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் நாங்கள் அமைத்திருந்த உணவு அரங்கத்தில் நாளொன்றுக்கு ரூ. 8000/- விற்பனை ஆனது. மொத்தமாக 1.25 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ததில் செலவினம் போக எங்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கிடைத்தது.

தமிழ்நாட்டின் பாரம்பரியஉணவு வகைகளை சுவையாக தயாரித்ததைக் கண்ட கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்கள் 'ராஜஸ்தான், கேரளா போன்ற மாநிலங்களில் இருந்து 10 வருடங்களாக தொடர்ச்சியாக கலந்து கொள்கின்றனர். நீங்களும் இனி மேல் நடைபெறும் அனைத்து சாராஸ் கண்காட்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும்' என்று சொன்னார்கள். தொடர்ந்து கேரளா மற்றும் நொய்டா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள சாராஸ் கண்காட்சிகள் குறித்த விபரங்களை தமிழ்நாட்டில் உள்ள ஒருங்கிணைப்பாளர்களிடம் தெரிவிப்போம். நீங்கள் முறையாக அனுமதி பெற்று கண்காட்சிகளில் கலந்து கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள்.

சாராஸ் கண்காட்சியில் நமது உணவு அரங்கத்திற்கு பாராட்டும், விருதும் கிடைத்த விபரத்தை நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களிடம் தெரிவித்தோம். அவர்களும் எங்களைப் பாராட்டினார்கள். மேலும் "தொடர்ந்து சாராஸ் கண்காட்சிகளில் கலந்து கொள்ள அனுமதி கேட்டபோது" அவர்கள் 'குழுவில் உள்ள அனைவருக்கும் சமையல் குறித்து பயிற்சி வழங்கி, சுழற்சி முறையில் கண்காட்சிகளில் கலந்து கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்தினார்கள்" என்று சாராஸ் கண்காட்சியில் கலந்து கொண்டு தமிழ்நாட்டு பாராம்பரிய கிராமிய உணவு வகைகளை தயாரித்து விற்பனை செய்து, விருதும் பாராட்டும் பெற்ற, அய்யனார் சுய உதவிக் குழுவின் உறுப்பினரான இந்திரா மகிழ்ச்சியுடன் கூறினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் வெற்றி பெற்ற இந்திரா மேலும் சாதனைகள் படைக்க வாழ்த்துகள்.






மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

## வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.




**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**

அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com





# “குடும்பத்துல எங்க மேல மரியாதை கூடியிருக்கு...”

## களிமண் கலைப்பொருள்கள் லட்சங்களில் வருமானம் கலக்கும் மகளிர் குழு

**‘நாலு பொம்பளைங்க ஒண்ணா சேர்ந்தா சண்டை வரும்னு சொல்வாங்க... நாங்க மொத்தம் 91 பேரு இருக்கோம். இதுவரை சண்டையே போட்டதில்லை. எங்களுக்கான அடையாளம் ‘பிசினஸ் வுமன்’ங்கிறது மட்டும்தான். லாபமோ, நஷ்டமோ பகிர்ந்துக்கிறோம். எல்லாரும் எல்லாத்தையும் சேர்ந்து கடந்துபோறோம். இந்தத் தொழில் எங்க குடும்பங்களோட தலையெழுத்தை மாத்தியிருக்குனு சொல்லலாம்” – குதிரை பொம்மைக்கு கயிறு செய்தபடியே படபடவென பேசுகிறார் பரிமளா.**

*விழுப்புரம் மாவட்டம் தென்னமாதேவி கிராமத்தில் இருக்கிறது ‘கலைமகள் சுடுமண் சிற்பக்குழு’. 20 பெண்கள் சேர்ந்து தொடங்கிய இந்தக் குழுவின் மூலம் இன்று 91 பெண்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இவர்களில் பலர் பள்ளிப்படிப்பைக்கூட முடிக்காதவர்கள். ஆனால், இன்று லட்சங்களில் டர்ன் ஓவர் செய்கிறார்கள். இவர்கள் தயாரிக்கும் களிமண் கலைப்பொருள்கள் தமிழ்நாடு முழுவதும் விற்பனைக்குச் செல்கின்றன. குழு உறுப்பினர்களில் ஒருவரான வேல்விழியிடம் பேசினோம்.*

*“நாங்க எல்லாரும் வெவ்வேறு மகளிர் சுய உதவிக்குழுக்கள்ல இருந்தோம். 2020-ல அரசாங்கத்துலேருந்து மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்காக களிமண் கலைப்பொருள் பயிற்சி கொடுத்தாங்க. அதுல வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்தவங்க கலந்துக்கிட்டோம். அந்தப் பயிற்சியில பொம்மை தயாரிப்பு, மார்க்கெட்டிங் டெக்னிக்னு நிறைய விஷயங்களைக் கத்துக்கிட்டோம். பயிற்சி எடுத்துக்கிட்ட 20 பேர் ஒண்ணா சேர்ந்து இந்த பிசினஸை தொடங்கினோம்” என்கிறார் வேல்விழி.*

*“ஒவ்வொருத்தர் வீட்டுலயும் ஏகப்பட்ட எதிர்ப்பு. ‘சட்டி, பானையெல்லாம் நீ ஏன் செய்யணும்’, ‘களிமண்கூட சேர்ந்து நீயும் மண்ணா போகப்போறேன்’னு வாங்காத பேச்சுகளே கிடையாது. எல்லாத்தையும்*





பொறுத்துக்கிட்டு தொழிலை ஆரம்பிச்சோம். என் பிள்ளைங்களை இங்கிலீஷ் மீடியத்துல படிக்க வைக்கணும்கிறது என்னோட ஆசை. இதோ இருக்காங்களே கன்னியம்மா... அவங்க வீட்டுக்காரர் தவறினதும், மூணு பிள்ளைங்களை வளர்த்துக்காட்டணும்கிற வைராக்கியத்தோட இருந்தாங்க. இப்படி இங்க இருக்குற 91 பேருக்கு பின்னாடியும் ஒரு கதையும், தேவையும் இருக்கு. அதை நோக்கித்தான் எல்லாரும் ஓட ஆரம்பிச்சோம்...” பிசினஸில் சந்தித்த சவால்கள் பகிரும் பரிமளாவைத் தொடர்கிறார் குழுத்தலைவர் மலர்விழி.

“மண் பொம்மை செய்யுறது சாதாரண விஷயமில்ல. மண்ணை மிதிச்சு பக்குவப்படுத்தணும், சுத்தப்படுத்தணும், அரைக்கணும். அச்சு போட்டு காய வைக்கணும், பெயின்ட் அடிச்சு விற்பனைக்கு அனுப்பணும். திட்டமிட்டு பண்ணாதான் 365 நாளும் நமக்கான வேலைவாய்ப்பை உருவாக்கி, தொழில் பண்ண முடியும். 2020-ல குழு ஆரம்பிச்சபோது நிறைய சிரமங்கள் இருந்துச்சு. பொருள்களை செஞ்சுட்டு ஆர்டர் வாங்குறதுக்காக கடைகடையா ஏறி இறங்கியிருக்கோம். அப்புறம் ஸ்டால்கள் போட்டது மூலமா தமிழ்நாட்டுல இருக்குற மொத்த வியாபாரிகள் எங்களுடைய பொருள்களை வாங்க ஆரம்பிச்சாங்க. கிடைச்ச லாபத்தை தொழில்லேயே முதலீடு பண்ணோம்.

மண்ணைக் கரைக்கிற மெஷின், மண் பிசையுற மெஷின்களை வாங்கினோம். எங்களுக்குனு ஓர் இடத்தை வாடகைக்கு எடுத்தோம். வியாபாரிகள் புதுப்புது மாடல்கள் கேட்டாங்க. அதனால் மத்த குழுக்கள்ல இருந்த பெண்களையும் எங்கத் தொழிலில் சேர்த்துக்கிட்டோம். இப்போ 100 வகையான பொருள்கள் தயார் பண்றோம்” - சொல்லும் போதே மலர்விழியின் கண்களில் மகிழ்ச்சி பிரகாசிக்கிறது.

“20 பேர் கொண்ட குழுவுல மட்டும் மாசம் ஏழு லட்சத்துக்கு மேல டர்ன் ஓவர் பண்றோம். மத்த பெண்கள் தயார் பண்ற பொருள்களை குழு மூலம் விற்பனை பண்றோம். சின்னச் சின்ன பணத்தேவைகளை எங்களுக்குள்ளேயே வாங்குறதும், கொடுக்குறதுமா நாங்களே பூர்த்தி பண்ணிக்கிறோம். கொஞ்ச நாளைக்கு முன்னாடி குழு உறுப்பினரான குணா அக்காவுக்கு, மெஷின்ல வேலை செய்யுறப்போ விரல் கட்டாயிருச்சு. அவங்களுக்கான மருத்துவ செலவை குழுவுல உள்ள எல்லா பெண்களும் பகிர்ந்துகிட்டோம். எங்க குடும்பத்துக்கான பணத் தேவைகளையும் பூர்த்தி பண்றோம். மொத்தத்துல குடும்பத்துலயும் சமுதாயத்துலயும் எங்க மேல மதிப்பும் மரியாதையும் கூடியிருக்கு...” பெருமை பொங்க விடைபெறுகிறார்கள் உழைப்பாளிகள்.

நன்றி! அவள் விகடன்
21.11.2023





# கருப்பைவாய்ப் புற்றுநோய் தடுப்பு முறைகள்

குடும்பத்தில் அல்லது வாழ்க்கையில் உறவுகளைப் பேணிக்காப்பதில் பெண்மையின் பங்களிப்பு மகத்தானதாகும். இந்திய பெண்களின் புற்றுநோய் சம்பந்தமான இறப்புகளில் முதன்மையான காரணமாக உள்ளது கருப்பை வாய்ப் புற்றுநோய் ஆகும். (இது மார்பக புற்றுநோயை விட அதிகம்).

### கருப்பை வாய்ப் புற்றுநோய் என்றால் என்ன ?

கருப்பை வாய்ப் புற்றுநோய் என்பது கருப்பை கழுத்தில் (செர்விக்ஸ்) ஏற்படும் புற்றுநோய் ஆகும். கருப்பை கழுத்து (செர்விக்ஸ்) கர்ப்பப் பையின் முகவாயில் அமைந்துள்ளது. மேலும் அது கர்ப்பப் பையை கிருமிகளின் தாக்குதலில் இருந்து காக்கிறது.

### கருப்பை வாய்ப் புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகிறது ?

இது பரம்பரையாக வரும் புற்றுநோய் அல்ல. எச்.பி.வி (Human Papilloma Virus) என்ற நுண்கிருமி கருப்பை கழுத்தை (செர்விக்ஸ்) தொற்றுவதால் கருப்பை வாய்ப் புற்றுநோய் ஏற்படுகிறது. பொதுவாக காணப்படும் இந்த வைரஸ் உடலுறவு கொள்வதால் பரவுகிறது. தடுப்பு மருந்து மூலம் இந்த வைரஸின் தாக்கத்தை தடுப்பது இப்போழுது சாத்தியமாகும்.

### யாருக்கு கருப்பை வாய்ப் புற்றுநோய் வர வாய்ப்புள்ளது ?

எச்.பி.வி. எனப்படும் இந்த வைரஸ் இளம் பெண்களைத் தான் அதிக அளவில் தாக்குகிறது. இது பிற்காலத்தில் கருப்பை வாய்ப் புற்றுநோய் ஏற்பட பெரும் காரணியாக விளங்குகிறது. ஆனால் வயது வித்தியாசமின்றி எல்லா பெண்களுக்கும் கருப்பை வாய்ப் புற்று நோய் வரும் அபாயம் உள்ளது. அதனாலேயே பெண்கள் கூடுமான வரை பாதுகாப்பாக இருப்பது சிறந்ததாகும்.

### கருப்பை வாய்ப் புற்றுநோய் எவ்வாறு கண்டுபிடிக்கப்படுகிறது ?

கருப்பை வாய்ப் புற்றுநோய் உச்சக்கட்டம் அடையும் வரை சாதாரணமாக எந்த அறிகுறியும் தென்படுவதில்லை. பாப் ஸ்மியர் சோதனை மூலமாக மட்டுமே கருப்பை வாய்ப் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளை அறிய முடியும். பாப்ஸ்மியர் சோதனையால் எச்.பி.வி. என்ற வைரஸ் தாக்கியுள்ளதைத் தான் கண்டுபிடிக்க முடியுமே தவிர நோய் பரவாமல் தடுக்க முடியாது.

தற்போது கருப்பை வாய்ப் புற்றுநோயை கட்டுப்படுத்த முடியும். தற்போது தடுப்பு மருந்து மூலம் கருப்பை வாய்ப்புற்றுநோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். இந்த தடுப்பு மருந்தானது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்துகிறது.இந்நோய் எதிர்ப்பு சக்தியானது எச்.பி.விகிருமி கருப்பை கழுத்தை (செர்விக்ஸ்) தாக்கும்போது அதனை எதிர்த்து உடலில் பரவாமல் காக்கிறது. கருப்பை கழுத்தை (செர்விக்ஸ்) எச்.பி.வி கிருமி தாக்காதவாறு இத்தடுப்பூசி செயல்படுவதால், இது கருப்பை வாய்ப்புற்றுநோய்க்கு எதிராக பாதுகாப்பளிக்கிறது

### இந்த தடுப்பு மருந்தை யார் யார் எடுத்துக் கொள்ளலாம் ?

கூடுமான வரை இந்த தடுப்பு மருந்தை இளம் பெண்கள் எடுத்துக் கொள்வதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை முழுமையாக பெற முடியும். இருப்பினும் அனைத்து பெண்களையும் இந்த கருப்பை வாய்ப் புற்றுநோய் தாக்க வாய்ப்புள்ளதால், இந்த தடுப்பு மருந்து தங்களுக்கு உகந்ததா என்று மருத்துவரிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்

### இந்த தடுப்பு மருந்து எவ்வாறு அளிக்கப்படுகிறது ? இது பாதுகாப்பனதா ?

இந்த தடுப்பு மருந்தை 6 மாதங்களில் குறிப்பிட்ட அளவில் 3 தடவையாக மருந்தாகவோ அல்லது ஊசிகளாகவோ கொடுக்கப்படுகிறது.இந்த தடுப்பு மருந்தானது உடலுக்கு பாதுகாப்பானதாகவும், ஒத்துக் கொள்வதாகவும் உள்ளது. மற்ற தடுப்பு மருந்துகளைப் போல் இதுவும் லேசான காய்ச்சல் அல்லது வீக்கம் போன்ற மிதமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி
**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

## தொழில் முனைவோராக்கிய இயக்கம்...

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் நகராட்சி, குரோம்பேட்டை மகேஸ்வரி தெருவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் ஸ்வஸ்திக் மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 5 பெண்கள் இணைந்து சுய தொழில் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், இயற்கை முறையில் நலங்கு மாவு சோப்பு, வேப்பிலை சோப்பு, குப்பைமேனி சோப்பு, ஆட்டு பால் சோப்பு, காபி சோப்பு போன்ற சோப்பு வகைகளும், ஆலிவ் எண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய், பாதாம் எண்ணெய் மற்றும் பல்வேறு நறுமணங்களில் ஷாம்பு போன்ற பொருட்களைத் தயாரித்து "ரஜட் பியூட்டிகேர்" என்ற பெயரில் அருகிலுள்ள கடைகளுக்கு மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்து வருகின்றனர்.

குழு கடனாக ரூபாய் 2 இலட்சம், வங்கி கடன் மற்றும் உள்கடன்கள் போன்றவற்றை பெற்று இயற்கைப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதன் மூலம், ஸ்வஸ்திக் மகளிர் சுய உதவிக்குழுவின் உறுப்பினர்கள் மாதந்தோறும் ரூ.20,000/-வரை வருமானம் பெறுவதுடன், கல்லூரி வளாகங்கள் மற்றும் கண்காட்சிகளின் கடைகள் வைத்து அதன் மூலமும் வருமானம் பெறுகின்றனர்.

''எதிர்காலத்தில் தங்களின் தொழிலை நன்கு விரிவுபடுத்தி, பல்பொருள் அங்காடிகளில் சந்தைப்படுத்திட பொருட்களின் பாக்கெட்டுகளை சிறந்த முறையில் வடிவமைக்கவும், கடை ஒன்றினை வாடகை எடுத்து, தரமான முறையில் பொருட்களை தயாரித்து விற்பனை செய்திடவும்'' திட்டமிட்டுள்ளதாக ஸ்வஸ்திக் மகளிர் சுய உதவிக்குழுவின் உறுப்பினர்கள் கூறுகின்றனர்.



## திறன்பயிற்சி வழங்கி, வேலைவாய்ப்பு பெற்றுத் தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் திறன் மேம்பாட்டு பயிற்சியால் தொழிற் பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்ற துரை கண்ணன் என்ற இளைஞர், தனது வாழ்வில் பெற்ற வெற்றி குறித்து கூறுவதைக் கேட்போம் வாருங்கள்.



"என் பெயர் துரைக் கண்ணன், நான் சேலம் மாவட்டம், அம்மாபேட்டை மண்டலம், வாய்க்கால் பட்டறை, இராமமூர்த்தி புதூர் பகுதியில் வசித்து வருகிறேன். எனது தந்தையார் திரு.பாலமுருகன், வெல்டிங் வேலை செய்து வருகிறார். நான் சிறுவயதில் பள்ளி விடுமுறை நாட்களில் தந்தையுடன் வெல்டிங் வேலைக்குச் செல்வேன். பி.காம்., படித்த பிறகு மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று தடுமாற்றத்துடன் இருந்து வந்தேன்.

இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்" மூலம் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெறுவதை செய்தித்தாள் மூலமாக அறிந்து கொண்டு, உடனடியாக "Amritaa Educational Trust" என்ற பயிற்சி நிறுவனத்தை தொடர்பு கொண்டு Telecom - Customer Care Executive / Call Center Relationship பயிற்சிக்கு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

மேற்கண்ட பயிற்சிகளோடு, Spoken English, Personality Development போன்ற பயிற்சிகளும் எனக்கு வழங்கப்பட்டது. பயிற்சியில் தேர்ச்சி பெற்ற நான் தற்போது சேலத்தில் செயல்பட்டு வரும் தனியார் நிறுவனம் ஒன்றில் Marketing Cum Junior Clerk (Trainee) என்ற பணியில் சேர்ந்து, மாதம் ரூ.11 ஆயிரம் ஊதியமாகப் பெற்று வருகிறேன்.

சிறு வயது முதலே வாழ்வில் சிரமப்பட்டு வந்த எனக்குப் பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்றுத் தந்தது "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் தான்" என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் துரை கண்ணன்.

## சாதாரணப் பெண்களை தொழில் முனைவோராக்கிய விழுப்புரம் விராட்டிக்குப்பம் ரோடுபகுதி அளவிலான கூட்டமைப்பு

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்ற மகாகவியின் வார்த்தைகளுக்கு வடிவம் தந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சாதாரண பெண்களையும் தொழில் முனைவோராக உருவாக்கி வருகிறது விழுப்புரம் நகராட்சி 1வது வார்டில் செயல்பட்டு வரும் விராட்டிக் குப்பம் ரோடு பகுதி அளவிலான கூட்டமைப்பு.

இக்கூட்டமைப்பின் வெற்றி குறித்து அதன் உறுப்பினர்கள் கூறும் போது, ‘விராட்டிக்குப்பத்தில் வசித்து வரும் நாங்கள் கூலி வேலைக்குச் சென்று அதன் மூலம் கிடைக்கும் குறைவான வருவாயில் சிரமத்துடன் வாழ்ந்து வந்தோம். அச்சமயத்தில் எங்கள் பகுதிக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் வந்து, சுய உதவிக் குழு இயக்கத்தின் சிறப்புகளை சொல்லி, சுய உதவிக் குழுக்கள் அமைத்திட வழிகாட்டினர். அதைத் தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள பெண்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை அமைத்து, எங்களுக்கு பல்வேறு பயிற்சிகளும் வழங்கினர்.

இந்நிலையில் எங்கள் பகுதியில் தனித்தனியாக செயல்பட்ட 16 சுய உதவிக் குழுக்களை இணைத்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ‘விராட்டிக்குப்பம் ரோடு பகுதி அளவிலான கூட்டமைப்பு’ என்ற பெயரில் கூட்டமைப்பினை உருவாக்கி, அதை தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தோம். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் எங்களுக்கு சுழல் நிதியாக வழங்கிய 50 ஆயிரம் ரூபாயினை எங்கள் கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு உள்கடனாக வழங்கி, முறையாக கடன் திருப்பம் செய்தோம்.

தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வங்கிக் கடன் மற்றும் சுழல் நிதி ஆகியவற்றைப் பெற்று, எங்களின் கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களில் 6 நபர்கள் உணவகம் நடத்துதல், 3 நபர்கள் கற்பூரம் தயாரித்து விற்பனை செய்தல், 3 நபர்கள் இட்லி மாவு தயாரித்து விற்பனை செய்தல், 66 நபர்கள் தங்க ஆபரணங்கள் தயாரிக்கும் பணி செய்தல் மற்றும் 10 நபர்கள் பெட்டிக் கடை நடத்துதல் ஆகிய தொழில்களை மேற்கொண்டு வருவாய் ஈட்டி வருகின்றனர்.

நாங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதால் விழுப்புரம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மகாராஜபுரம் கிளை மூலம் 50 இலட்சம் ரூபாய் பெருங்கடனாக வழங்கப்பட்டது. இந்தத் தொகையை எங்களின் கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள 16 சுய உதவிக் குழுக்களும் தேவையின் அடிப்படையில் உள்கடனாகப் பெற்று, தங்களின் தொழில் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தி, பொருளாதார வளர்ச்சிப் பெற்று வருகின்றன.

எங்களின் விராட்டிக் குப்பம் ரோடு பகுதி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் பெரிதும் உறுதுணையாக இருந்து, எங்களுக்கு எப்போதும் வழிகாட்டி வருகிறது” என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.



## சட்டம் என்ன சொல்கிறது?

# உழைக்கு மகளிருக்கான சட்டங்கள்

பெண்கள் இல்லாத துறை என்பதே அரிதாகிக் கொண்டிருக்கிற காலகட்டம் இது. இந்திய அரசியல் அமைப்பு சாசனம், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கூறினாலும் அதன் 15(3) சரத்தின் கீழ் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான தனிச்சட்டங்கள் இயற்ற வழிவகை செய்துள்ளது. அதன் அடிப்படையிலேயே பல நலச் சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறையில் உள்ளன.

### மகப்பேறு நல சட்டம், 1961 (மெட்டர்னிட்டி பெனிஃபிட் ஆக்ட் 1961)

ஒரு பெண்ணுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் சிரமத்தையும் ஒரே நேரத்தில் கொடுக்கும் காலம்தான் அவளது தாய்மைப் பருவம். தாய்மையடைந்த நிலையில் வேலைக்குச் செல்லும் போது அவளுக்கு சட்டம் கொடுக்கும் பாதுகாப்பு மற்றும் சலுகைகள் பற்றி மகப்பேறு நல சட்டம் 1961 விளக்குகிறது. தாய்மையடைந்துள்ள ஒரு பெண் மற்றும் அவள் ஈன்றெடுக்கும் அந்தப் புது வரவின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் குழந்தைப்பேற்றுக்கு சில நாள்கள் முன்பும், பின்பும் சராசரி பணி செய்ய இயலாத தாய்க்கும், சேய்க்கும் தேவையான விடுப்புடன் கூடிய பொருளாதார சலுகை மற்றும் இதர சலுகைகள் அளிப்பது என்ற நோக்கிலேயே இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

### இந்தச் சட்டம் பொருந்தும் இடங்கள்

தனியார் அல்லது அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள், சுரங்கம், தேயிலைத் தோட்டங்கள் ஆகியவற்றில் நேரடியாகவோ அல்லது ஒப்பந்தம் மூலமாகவோ பணி செய்யும் பெண்கள், கடை, அங்காடி போன்றவற்றில் 10-க்கும் அதிக பெண்கள் - சென்ற 12 மாதங்களில் பணி புரியும் பட்சத்திலும், அரசு, தொழில், வர்த்தகம், விவசாய ரீதியான பணியில் ஈடுபடுவோருக்கும் 2 மாத அறிவிப்பினைத் தொடர்ந்து அரசாங்கப் பதிவேட்டில் அறிவித்து இச்சட்டத்தை அவர்களுக்கும் அமல்படுத்தச் செய்யலாம்.

### சட்டத்தின் மூலம் கிடைக்கும் சலுகைகள்

- பிரசவத்துக்கு முன் 6 வார காலத்துக்கான ஊதியத்துடன் கூடிய விடுப்பு, பிரசவத்துக்குப்பின் 6 வார காலத்துக்கான ஊதியத்துடன் கூடிய விடுப்பு (இந்த 12 வார விடுப்பினை எப்படி வேண்டுமென்றாலும் எடுத்துக் கொள்ளலாம்).
- நிர்வாகத் தரப்பு இலவச மருத்துவ பாதுகாப்பு தர இயலாத பட்சத்தில் குறைந்தது 1,000 ரூபாய்க்கான மருத்துவ போனஸ். பேறுகாலம், பிரசவம் அல்லது கருக்கலைப்பின் போது ஏற்படும் உடல்நலக் குறைவுக்கான சான்றாவணம் சமர்ப்பிக்கும் பொருட்டு மேலும் ஒரு மாதத்துக்கான ஊதியத்துடன் கூடிய விடுப்பு.
- கருக்கலைப்பு ஏற்படின் 6 வாரம் ஊதியத்துடன் கூடிய விடுப்பு
- குடும்பக் கட்டுபாடு அறுவை சிகிச்சை மேற்கொண்டிருந்தால் 2 வாரம் ஊதியத்துடன் கூடியவிடுப்பு.
- பிரசவத்துக்கு 6 வாரம் முன்பும் அதற்கு முன் ஒரு மாதமும் ஆக மொத்தம் 10 வாரங்கள் வரை எளிமையான பணி கோர கருவுற்ற பெண்ணுக்கு உரிமை உண்டு. அந்த உரிமை கோரும் நேரத்தில் கருவுற்றதற்கு ஆதாரமாக மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.
- பிரசவத்துக்குப்பின் பணியில் சேர்ந்த பிறகு எப்போதும்கிடைக்கும்பிரேக்பீரியட் உடன் மேலும் 2 முறை 15 நிமிட கால அவகாசம் கொண்ட (குழந்தைக்கு பாலூட்டுவதற்கு) இடைவெளி கொடுப்பது அவசியம். பேறுகாலத்தின் போது பெண்ணின் பணி முறையை உடல்நிலைக்கு குந்தகம் ஏற்படும்படி மாற்றம் செய்யக் கூடாது. பேறு காலத்தில் ஒரு பெண்ணை பணி நீக்கம் செய்யக் கூடாது. அவ்வாறு பணி நீக்கம் செய்யும் பட்சத்தில் பேறுகால சலுகையைப் பெற அவர்களுக்கு உரிமை உண்டு. (ஒருவேளை தண்டனைக்குரிய குற்றச் செயலுக்காக வேலையிலிருந்து நீக்கும் பட்சத்தில் இச்சட்டத்தின் கீழ் சலுகை மறுக்கப்படலாம்).

**ஆதாரம் :**
பெண்கள் மற்றும் குழந்தைகள்
மேம்பாட்டு அமைச்சகம்



## செழிப்பான மாந்தோப்பு வளர்க்கத் திறன் பெற்றேன், சுவையான மாஙகாய்/கனிகளின் வளம் தொட்டேன்!

என் பெயர் பஞ்சவர்ணம், மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி வட்டாரம், கம்பூர் ஊராட்சியில் வசித்து வரும் நான், நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் குடும்ப சூழ்நிலைக் காரணமாக மேற்கொண்டு படிக்க முடியாமல் தனது சொந்தத் தோட்டத்தில் விவசாயம் செய்து வந்த நான், எங்கள் பகுதியில் செயல்படும் ஸ்ரீ பொன் அய்யனார் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளதுடன், தோட்டக்கலைத் துறை மூலம் உருவாக்கப்பட்ட 100 உறுப்பினர்களைக் கொண்ட கொட்டாம்பட்டி உழவர் உற்பத்தியாளர் குழுவிலும் உறுப்பினராக உள்ளேன்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலில் கம்பூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் அலங்கம்பட்டி கிராமத்தில் செழிப்பான மாங்காய்/மாங்கனி உற்பத்திக்கான சமுதாயப் பண்ணைப் பள்ளியில் சிறப்பானபயிற்சி நடத்தப்பட்டது. எங்கள் உழவர் குழுவைச் சேர்ந்த பயிற்றுனர் (Spark) திரு. பிச்சன் என்பவர் 15 நாட்களுக்கு ஒரு முறை இப்பயிற்சியை நடத்தினார். இந்தப் பயிற்சியில் என்னுடன் சேர்ந்து, எங்கள் உழவர் குழுவைச் சேர்ந்த 30 நபர்கள் பயிற்சி எடுத்து வந்தோம். இப்பயிற்சியில் பாதுகாப்பான முறையில் மாமரம் வளர்ப்பு, நோய்த்தொற்றுகளை சரி செய்யும் வழிமுறை மற்றும் மகசூல் உற்பத்திப் பெருக்கும் முறை பற்றித் தெளிவாக எடுத்து கூறப்பட்டது.

நான் கற்றுக்கொண்ட மாந்தோப்பு வளர்ப்பு முறையை எங்கள் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கும் கற்றுக் கொடுத்து, அப்பயிற்சியின் மூலம் இயற்கை முறையில் பூச்சி வெட்டுதல் மற்றும் நோய் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவது குறித்துப் பயிற்றுவிக்கிறேன். மேலும் எனது தோட்டத்தில், இயற்கை விவசாய முறையில் மா உற்பத்தியில் அதிக மகசூல் பெற்று உற்பத்தியில் எவரும் எட்டாத உயரத்தை அடைந்த இரும்புப் பெண்மணி என்று பெருமிதத்துடன் மகிழ்ச்சி அடைகிறேன். CFS பயிற்சிக்கு வழிகாட்டியாக இருக்கும் எங்கள் உழவர் குழுவிற்கும், இப்படி ஒரு வாய்ப்பு அளித்துப் பயிற்சி ஏற்படுத்திக் கொடுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும் என் குடும்பம் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பஞ்சவர்ணம்,**
- ஸ்ரீ பொன் அய்யனார் மகளிர் குழு,
கம்பூர், கொட்டாம்பட்டி, மதுரை மாவட்டம்.





## குழுவாகத் தேன் உற்பத்தியைச் செய்கிறோம்! தொழிற்குழுவாக வணிகத்திலும் வளர்கிறோம்!

கிருஷ்ணகிரி மாவட்டம், பருகூர் ஒன்றியம், மஜீத்கொல்லஹள்ளி ஊராட்சியில் வசித்து வரும் நாங்கள் TNRTP Bee Keeping என்ற பெயரில் 16 உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்குழு அமைத்து, எங்கள் தொழிற்குழுவின் மூலமாகத் தேன் எடுத்து விற்பனை செய்து வருகிறோம். நாங்கள் முன்பு, தனித்தனியாகத் தேன் எடுத்து ஓரளவு வருவாய் ஈட்டி வந்தோம். அந்த நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்கள் கிராமத்தில் உள்ள 16 உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஒரு தொழிற்குழுவாக உருவாக்கியது. அதன் பிறகு எங்கள் தொழிற்குழுவிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழியாக 75,000/- ரூபாய் தொடக்க நிதி வழங்கப்பட்டது.

அந்த நிதியில் தேனீப் பெட்டிகள், தேன் பிழியும் கருவி, புகைப்பான், தேன் எடுக்கும் கத்தி, தேன் பெட்டி, தேன் அடை கட்டுதளம் (Comb Foundation) தேன் பிடிக்கும் கருவிகள் போன்றவற்றை வழங்கியதோடு, தேன் வளர்ப்பிற்குக் குறைந்த செலவில் புதிய வழிமுறைகளும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. அதே போன்று நாங்கள் உற்பத்திச் செய்யும் தேன் வகைகளை நியாயமான விலையில் விற்பனைச் செய்ய மஜீத்கொல்லஹள்ளி ஊராட்சி மகளிர் குழுக் கட்டிடத்தில் எங்களுக்காக தேன் விற்பனையகம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த விற்பனையகத்தில் எங்கள் தேன் வகைகளை விற்பனைச் செய்து வருகிறோம். எங்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு மஜீத்கொல்லஹள்ளி தொழிற்குழு சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



**– TNRTP தேன் வளர்ப்புத் தொழிற்குழு உறுப்பினர்கள்,**

மஜீத்கொல்லஹள்ளி, பருகூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

## உற்சாகமுடன் தொழிற் பயிற்சி பெற்றோம், ஊட்டம் நிறைந்த பண்டங்களைப் படைத்தோம்!

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், விரகனூர் ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் சத்யப்பிரியா, (கணவர் பெயர் வினோத்).எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். நான் வசிக்கும் பகுதியில் உள்ள ஸ்ரீசாய் மகளிர் குழுவில் 5 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்து வரும் நான், எனது குடும்ப வறுமையின் காரணமாக கடைகளில் வேலை செய்து குறைந்த வருமானம் ஈட்டி வந்தேன். குழுவில் உறுப்பினராக உள்ள மகளிர் தங்களுக்குத் தெரிந்த வேலைகளைச் செய்து வந்தோம்.

சொந்தமாகக் கடை வைத்து நடத்த வேண்டும் என்பதே என்னுடைய கனவாக இருந்தது. இந்நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தினர் எங்கள் குழுவை கண்டறிந்து எங்களுக்குத் தேவையானத் தொழிற் பயிற்சிகளை சமுதாயத் திறன் பள்ளி மூலம் வழங்கினர். அப்பயிற்சியில் 20 நபர்கள் கலந்துகொண்டு சிறுதானிய லட்டு, சேவு அல்வா, புட்டு மாவு போன்ற சத்துள்ள சிறுதானிய உணவு வகைகளைத் தயாரித்து விற்பனைச் செய்யக் கற்றுக் கொண்டோம். பயிற்சி முடிந்தவுடன் நாங்கள் குழுவாக சேர்ந்து தேவையின் அடிப்படையில் சிறுதானிய உணவுப் பொருட்களைத் தயாரித்து விற்பனைச் செய்து வருகின்றோம்.

“உணவே மருந்து, மருந்தே உணவு”என்ற தாரக மந்திரத்திற்கு ஏற்ற வகையில் குழந்தைகளின் நலன்களைக் கருதி இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட ஊட்டம் நிறைந்த உணவுப் பண்டங்களை பள்ளிகளும், கல்லூரிகளும் மற்றும் பிற நிறுவனங்களும் மிகுந்த ஆர்வத்துடன் வாங்கிப் பயனடைந்து வருகின்றனர். அதுமட்டுமன்றி எங்களின் கனவும் நிறைவேறியது. முன்னர் நாங்கள் வேலையில்லாமல் இருந்தோம். ஆனால், தற்போது தொழில் முனைவோர்களாக சாதித்து வருகின்றோம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். எங்களின் தொழிற் திறனை உயர்த்தி, நிலையான வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொடுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்களின் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– சத்யபிரியா,**

ஸ்ரீசாய் மகளிர் சுய உதவிக் குழு,

விரகனூர் ஊராட்சி,

மதுரை மாவட்டம்.



## ஒற்றுமையுடன் ஒன்றிணைந்தோம்! உயர்வுக்கு பொருளுணர்ந்தோம்!

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரத்தில் உள்ள இராமசாமி நாயக்கன்பட்டியில் செயல்படும் எண்ணெய் பிரித்தெடுப்போர் தொழிற்குழுவின் வெற்றிப் பயணத்தை அதன் உறுப்பினர்கள் வாயிலாக தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

“எனது பெயர் காமாட்சி, தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரம், இராமசாமி நாயக்கன்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் நான், TNRTP எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்குழுவின் செயலாளராக உள்ளேன்.எங்களது ஊராட்சியில் பெருவாரியான மக்கள் தென்னை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். நானும் தென்னந்தோப்பிற்கு வேலைக்குச் செல்லும் வேளையில் அங்கு கிடைக்கும் தேங்காய்களைக் காய வைத்து அருகில் உள்ள இராயப்பன்பட்டி ஊராட்சியில் உள்ள மரச்செக்கு ஆலையில் தேங்காய் எண்ணெய்யாக மாற்றி எனது உபயோகத்திற்கு பயன்படுத்தி வந்தேன். மேலும் மீதமுள்ள எண்ணெயை எனது ஊராட்சியிலேயே குறைந்த இலாபத்திற்கு விற்பனைச் செய்து வந்தேன். என்னைப் போலவே மேலும் சிலப் பெண்களும் இந்தத் தொழிலைச் செய்து வந்தனர்.

இந்நிலையில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அலுவலர்கள் எங்களை அணுகி, “தேங்காய் எண்ணெய் உற்பத்திப் பணியில் ஈடுபட்டுள்ள நபர்களை ஒன்றாக இணைத்து ஓர் தொழிற்குழு தொடங்கலாம் எனவும், தொழிற்குழு தொடங்குவதால் எங்களுக்குக் கிடைக்கவுள்ள நன்மைகள் குறித்தும்” விளக்கம் அளித்தனர்.

திட்ட அலுவலர்கள் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில் எங்கள் ஊரில் இத்தொழிலில் ஈடுப்பட்டுள்ள 10 பெண்கள் ஒன்றாக இணைந்து ‘TNI07-007-NEG01எண்ணெய் பிரித்தெடுத்தல் தொழிற்குழு’ எனும் பெயரில் ஓர் தொழிற்குழு தொடங்கி, தற்போது நாங்களே நிறுவனப் பெயரில் தேங்காய் எண்ணெய் உற்பத்திச் செய்து தரமான முறையில் விற்பனைச் செய்து வருகிறோம். இதனால் எங்கள் உழைப்புக்கு ஏற்ற பலன் எங்களுக்கே கிடைக்கிறது.

தற்போது எங்கள் தொழிலை மேலும் மேம்படுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து, தொடக்க நிதியாக 75,000/- ரூபாய் பெற்று தென்னை விவசாயிடம் இரண்டு வருடத்திற்கு ஒப்பந்தம் போட்டு, எண்ணெய் உற்பத்திச் செய்து வருகிறோம். மேலும் எங்களது தேங்காய் எண்ணெய்க்கு “RNP Coconut Oil” எனும் பெயரில் தனியாக வணிக அடையாளம் “Brand” உருவாக்கி எங்கள் தொழிலை மேலும் மேம்படுத்தியுள்ளோம். தற்போது எங்களது தேங்காய் உற்பத்தித் தொழிலில் தினமும் வேலை செய்யும் வகையில் இரண்டு கூலியாட்களை பணியமர்த்தியுள்ளோம். தொழிலாளியாக இருந்த நாங்கள் தற்போது இரண்டு நபர்களுக்கு ஊதியம் கொடுக்கும் அளவிற்கு முன்னேறியுள்ளதை நினைத்து பெருமிதம் அடைகிறோம். ‘விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை’ என் பொன்மொழிக்கு ஏற்ற வகையில், நாங்கள்வாழ்ந்து காட்டுவோம் திட்டம் தந்த ஊக்கத்தினைக் கொண்டு வெற்றியை அடைந்து வருகிறோம்”

"வானம் பூமியை தொட்டால் அது அதிசயம், ஆனால் மனிதன் வானத்தை தொட்டால் அது சாதனை, அதிசயத்தை பார்த்துக் கொண்டிருப்பதை விட வானத்தை தொட முயற்சிப்போம் - காத்திருக்காதீர்... செயல்படுவீர்!"

- காமாட்சி, TNRTP எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்குழு,

இராமசாமிநாயக்கன்பட்டி, உத்தமபாளையம் தேனி மாவட்டம்.



# முடக்கற்றான் கீரை தோசை

முடக்கற்றான் கீரை என்றாலே மூட்டு வழியை போக்குவது என்று பலருக்கும் நினைவுக்கு வரும். இக்காலத்தில் நடுத்தர வயதினருக்கும் மூட்டு வலி வருகிறது. ஏனெனில் பெரும்பாலோர் ஐ.டி நிறுவனத்தில் வேலை பார்ப்பதால் உட்கார்ந்து கொண்டு வேலை பார்க்கின்றனர். ஆதலால் உடல் உழைப்பு அதிகமில்லை. அதனால் உடல் எடையும் கூடுகிறது. அத்துடன் துணை இணைப்பாக மூட்டு வலியும் வருகிறது. இந்த முடக்கற்றான் கீரையை தோசையாக செய்து சாப்பிட்டால் உடம்பில் உள்ள அனைத்து மூட்டுக்கும் வலிமை கொடுக்கும். அத்துடன் மிளகு சேர்த்திருப்பதால் சளிக்கும் மிக சிறந்தது.



### தேவையான பொருட்கள்

இட்லி அரிசி 1/2 கிலோ, முடக்கறுத்தான் கீரை 1 கட்டு (200 கிராம்), மிளகு, சீரகம் தலா 25 கிராம், உப்பு மற்றும் நல்லெண்ணை தேவையான அளவு

### செய்முறை

முதலில் ஒரு பாத்திரத்தில் இட்லி அரிசியை போட்டு தண்ணீர் ஊற்றி குறைந்தது ஐந்து மணி நேரம் ஊற வைத்து, பின்னர் அந்த அரிசியை நன்றாகக் கழுவி வைத்துக் கொள்ளவும். முடக்கற்றான் கீரையைப் பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

அரிசியை நன்றாக வடிகட்டி கிரைண்டரில் போட்டு அத்துடன் அரிந்து வைத்துள்ள முடக்கற்றான் கீரை, மிளகு, சீரகம், உப்பு சேர்த்து, லேசாக தண்ணீர் தெளித்து அரைக்கவும். தோசை பதத்துக்கு அரைக்க வேண்டும். அரைபட்டவுடன் கிரைண்டரை நிறுத்தி விடவும். இல்லையென்றால் மாவு மிகவும் மையாக அரைத்துவிடும். அதனால் சுவையாக இருக்காது. அதனால் கிரைண்டரை நிறுத்தி மாவை வழித்து எடுத்து ஒரு பாத்திரத்தில் வைக்கவும். முடக்கற்றான் கீரை சேர்த்திருப்பதால் மாவு பச்சை நிறமாக இருக்கும்.

தோசைக் கல்லை அடுப்பில் வைக்கவும். கல் காய்ந்தவுடன் மாவை ஒரு கரண்டி எடுத்து தோசை போல் தேய்த்து, தோசையை சுற்றி நல்லெண்ணையை ஊற்ற வேண்டும். ஒருபக்கம் வெந்தவுடன் தோசையை திருப்பி போட்டு மறுபடியும் நல்லெண்ணையை ஊற்ற வேண்டும். இரண்டு பக்கமும் வெந்தவுடன், தோசையை எடுத்து விடவும்.

சத்து நிறைந்த அனைவரும் விரும்பி சாப்பிடும் இந்த தோசையை எந்த சட்னியுடனும் சாப்பிடலாம் அல்லது வெறுமனே கூட சாப்பிடலாம்.

## பயனுள்ள குறிப்புகள்

- மீந்து போகும் பழைய சாதம் ஊறிய அந்த தண்ணீரில் இருக்கும் சத்துக்கள் அளவற்றவை, எனவே மீந்து போகும் சாதத்தில் தண்ணீரை ஊற்றி வைத்து விடுங்கள். மறுநாள் அதனை செடிகளுக்கு ஊற்றினால் செடிகள் செழிப்பாக வளரும்.
- உருளைக்கிழங்குச் சமைக்கும்போது இருந்தால் அதனுடன் கொஞ்சம் ஓமம் மற்றும் சீரகம் ஆகியவற்றை சேர்த்து உருளைக்கிழங்கு கறி தயாரித்தால் மணமாக இருக்கும். மேலும் உருளைக்கிழங்கின் மூலம் ஏற்படும் வாய்வு நீங்கி செரிமானம் அதிகரிக்கும்.
- இட்லிக்கு அடிக்கடி மாவு அரைப்பவர்கள் உளுந்து பயன்படுத்துவதற்கு பதிலாக சோயா மொச்சையை ஊற வைத்து மாவு அரைத்து பாருங்கள். சத்தான இட்லி, தோசை கிடைக்கும்.
- முட்டையின் வெள்ளைக்கருவை எலுமிச்சை சாற்றுடன் கலந்து தலை முடி முழுவதும் தடவி 10 நிமிடம் கழித்து சாதாரணமாக ஷாம்பு போட்டு குளித்தால் கண்ணாடி போல உங்கள் கூந்தல் ஜொலிக்கும்.
- செம்பருத்தி இலைகளை மைய அரைத்து தலை முழுவதும் தடவி 10 நிமிடம் ஊறவிட்டு அலசினால் கருகருவென கேசம் மிருதுவாக அலைபாயும்.

திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

திருமதி. க. முத்து மீனாள்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர்

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் திட்ட செயல்பாடுகள்

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், தூத்துக்குடி திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கடலோர பகுதிகளில் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

கடந்த மாதம் தமிழகத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பெரும்பாலான மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அவர்களை அதிலிருந்து மீட்டெடுக்கும் பொருட்டு தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செயல்பாட்டில் உள்ள பகுதிவாழ் மக்களுக்கு துயர் குறைப்பு நிதி கடனாக தனிநபருக்கு ரூபாய் பத்தாயிரம் வரையும், வருமானத்தை பெருக்கும் நடவடிக்கை எனும் திட்டத்தின் மூலம் ஒரு நபருக்கு ரூபாய் இருபதாயிரம் வரையும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விரு திட்டங்கள் வாயிலாக கடந்த ஒரு மாதகாலத்தில் துயர் குறைப்பு நிதியிலிருந்து திருவள்ளூர் மாவட்டத்தில் 45 நபர்களுக்கு ரூ. 4.50 இலட்சம், செங்கல்பட்டு மாவட்டத்தில் 64 நபர்களுக்கு ரூ. 6.40 இலட்சம், தூத்துக்குடி மாவட்டத்தில் 86 நபர்களுக்கு ரூ. 8.60 இலட்சம், திருநெல்வேலி மாவட்டத்தில் 14 நபர்களுக்கு ரூ. 1.40 இலட்சம், கன்னியாகுமரி மாவட்டத்தில் 128 நபர்களுக்கு ரூ. 12.80 இலட்சம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 114 நபர்களுக்கு ரூ. 11.40 இலட்சம் என வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வருமானத்தை பெருக்கும் நடவடிக்கை திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 11 நபர்களுக்கு ரூ. 2.20 இலட்சம், செங்கல்பட்டு மாவட்டத்தில் 25 நபர்களுக்கு ரூ. 5.00 இலட்சம், தூத்துக்குடி மாவட்டத்தில் 31 நபர்களுக்கு ரூ. 4.80 இலட்சம், திருநெல்வேலி மாவட்டத்தில் 16 நபர்களுக்கு ரூ. 3.20 இலட்சம், கன்னியாகுமரி மாவட்டத்தில் 140 நபர்களுக்கு ரூ. 28.00 இலட்சம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 63 நபர்களுக்கு ரூ.9.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம், எதிர்பாராமல் ஏற்படும் பேரிடர் இழப்புகளிலிருந்து மக்களை மீட்டெடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த துயர் குறைப்பு நிதி (ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம்) 80,012 நபர்களுக்கு 6846.11 இலட்சம் ரூபாய், வருமானம் பெருக்கும் நடவடிக்கைக்கான நிதியாக 24,230 நபர்களுக்கு 3974.54 இலட்சம் ரூபாய், 25,236 நபர்களுக்கு காப்பீடு, 7642 மகளிர் உதவிக் குழுக்களுக்கு 82,702.13 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன், 6711 கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்கு வங்கி கடனாக 17,535.56 இலட்சம் ரூபாய், மீனவர்களுக்கான விடுதலைக் கடன் 9526 நபர்களுக்கு 3721.80 இலட்சம் ரூபாய், மீன் விற்பனை / பதப்படுத்துதல் / கடற்பாசி சேகரிப்போர் சாகுபடி செய்யும் 29,988 மகளிருக்கு கடனாக 9070.74 இலட்சம் ரூபாய், 5,223 மீனவர்களுக்கு மீன்பிடி உடமைகளுக்கான காப்பீடு, மீன் விற்பனை சங்க உறுப்பினர் மற்றும் மீன் விற்பனை / பதப்படுத்துதல்/ கடற்பாசி சேகரிப்போர் சாகுபடி செய்யும் பொறுப்புக் குழு கூட்டு உறுப்பினர்களுக்கான துயர் குறைப்பு நிதியாக (மாவட்ட அளவிலான மீன் விற்பனை சங்கசம் மேளனம் மூலம்) 8698 நபர்களுக்கு 817.28 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.



# கன்னியாகுமரி மாவட்டம் பைங்குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாடுகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பைங்குளம் ஊராட்சியின் 17 குக்கிராமங்களில் 12,845 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். பைங்குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் தொடக்க காலகட்டத்தில் (31.03.2012) 412 உறுப்பினர்களைக் கொண்ட 27 மகளிர் சுய உதவிக் குழுக்கள்மட்டும் இணைந்திருந்தன. மாதசந்தாவாக ஒரு நபருக்கு ஒரு ரூபாய் வீதம் கூட்டமைப்பில் இருந்து வசூலிக்கப்பட்ட தொகை மட்டுமே நிதி ஆதாரமாக இருந்ததால், உறுப்பினர்களுக்காக திட்டங்கள் எதையும் செயல்படுத்த முடியாமல் பின் தங்கிய நிலையில் கூட்டமைப்பானது இருந்தது.

இந்நிலையில் 2010ல் சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் சார்பில் பைங்குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு, களப்பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் நடவடிக்கையினால் 140 மகளிர் குழுக்கள் (2043 உறுப்பினர்கள்) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்தனர். ஒரு நபருக்கு 5/- ரூபாய் வீதம் சந்தா தொகை வசூலிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 18.09.2010 முதல் துயர் குறைப்பு நிதியின் மூலம் மக்களின் அவசர மருத்துவ உதவிக்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டம் மூன்று தவணையாக ரூ.7,30,730/-ம், மக்கள் பங்குத் தொகையாக ரூ.3,81,200/-ம் பெறப்பட்டு, 2823 நபர்களுக்கு, மருத்துவ உதவி மற்றும் வாழ்வாதார இழப்பிற்காக இதுவரை 2,06,87,500/-ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ICICI வங்கி மூலம் 87 குழுக்களுக்கு ரூ. 13 கோடிகடன் வழங்கப்பட்டுள்ளதில், 2 சதவீதம் கமிஷனாக ரூ.8,29,739/- வரை கூட்டமைப்பு வருவாய் ஈட்டியுள்ளது. மேலும் தொழில் செய்ய ஆர்வம் உள்ளவர்களுக்கு வட்டியில்லா கடனாக 9 தொழிலுக்கு 22,12,400/- ரூபாய் வழங்கப்பட்டுள்ளது நபார்டு வங்கியின் மூலம் 49 கூட்டு பொறுப்புக்குழுக்களுக்கு ரூ.1,33,47,626/- கடன் இணைப்பாக வழங்கப்பட்டதில், கமிஷன் தொகையாக 13,073/- ரூபாயும், இந்தியன் வங்கி மூலம் 132 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.300 இலட்சம் கடன் இணைப்பாக வழங்கப்பட்டதில், கமிஷன் தொகையாக 1,90,000/- ரூபாயும் கூட்டமைப்பிற்கு கிடைத்துள்ளது.

பைங்குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு 1911.2013 அன்று மணிமேகலை விருதுடன், ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. மேலும் பெருங்கடனாக 3 கோடி ரூபாய் பெற்றதன் மூலம் 7,50,000/- ரூபாய் கூட்டமைப்பிற்கு இலாபமாக கிடைத்துள்ளது. ஊக்கத்தொகை நிதியிலிருந்து கல்வி செலவு, வீடு பழுதுபார்ப்பதற்கு என 490 நபர்களுக்கு 97,44,500/- ரூபாயும், வருவாய் ஈட்டும் தொழில் கடனாக ஆடு வளர்ப்பு, தையல் தொழில், பெட்டிக்கடை என குறுந்தொழில்கள் செய்திட 1208 நபர்களுக்கு 2,33,91,000/- ரூபாயும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், துயர் குறைப்பு நிதி ரூ.20,50,987/, வருமானம் பெருக்கும் நடவடிக்கைக்கான நிதி ரூ.52,24,419/-, ஊக்கத் தொகை நிதி ரூ.18,93,958/, பொது நிதி ரூ. 53,641 மற்றும் BDC கமிஷன் ரூ.8,29,739/- என நாளது தேதி வரை மொத்தம் ரூ.100.53 இலட்சம் நிதி வங்கி கணக்கில் உள்ளது.

இக்கூட்டமைப்பு குறித்து அதன் உறுப்பினர்கள் கூறுகையில், “வருங்காலங்களில் எங்கள் கூட்டமைப்பை ஒரு வங்கியாக மாற்றி, எங்கள் பகுதியில் அனைவருக்கும் பயன் பெறும் விதமாக மாற்றிக்காட்டுவோம் என்ற முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். தற்போது 189 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக இருக்கும் 2876 உறுப்பினர்களுடன் எங்கள் கூட்டமைப்பானது வளர்ச்சி பாதையை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. இந்த மாபெரும் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் அலுவலர்களுக்கும், பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கும் எங்கள் கூட்டமைப்பின் சார்பாக நன்றி...நன்றி...நன்றி...” என மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.



Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,30,100 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

# நலனுக்கும்,
# பசுமைக்கும்
# வந்தனைச்
# செய்வோம்!



அழகிய
மூலிகைக் கன்றுகள் மற்றும்
மரக்கன்று வகைகளை
வாழை மட்டை தொட்டி
மற்றும் எருவுடன்
விற்பனைச் செய்கின்றோம்.

## கன்று வகைகள்

**கற்பூரவள்ளி, துளசி, நாவேரி வேர், அம்மன் பச்சரிசி, முடக்கத்தான், கீழாநெல்லி, பிரண்டை, குப்பைமேனி, கற்றாழை, எலும்பு ஒட்டித்தழை, புன்னை, வேம்பு, கொய்யா, நெல்லி, எலுமிச்சை, கிச்சிளி, லெமன் கிராஸ் போன்றவை.**

ஒரு கன்றின் விலை ரூ. **50**



**கற்பூரவள்ளி**
**இருளர் பெண்கள்**
**நர்சரி தொழிற்குழு**
செம்பாக்கம்,
திருப்போரூர்,
செங்கல்பட்டு.

மூலிகைக் கன்றுகளை
வாங்கிட
தொடர்புகொள்ளுங்கள்
**திருமிகு. அலமேலு**
**7200417893**



## தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th January 2024 Posted at Patrika Channel, Egmore.







TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

ஏழையின் சிரிப்பில் இறைவனைக்
காண்போம் என்பது போல் வெள்ளரிப்பிஞ்சு
விற்கும் இந்த மூதாட்டியின் சிரிப்பில்
தெரிவது உழைப்பின் மேன்மையும்,
தன்னம்பிக்கையின் உச்சமும்.

"செயல்–அனைத்து வெற்றிகளுக்கும் அடித்தளமாகும்,
அதற்கு வயது தடையில்லை!"




## நம்மீது நம்பிக்கை நமக்கிருக்கும் வரை வாழ்க்கை நம் வசமே